ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராயநம:

# ஆர்யதர்மம்.

इदानीमत्यल्पेष्वयि हृदय कार्येष्वतिमहा-
निथान् व्यासङ्गस्तेनकलयसि येन स्मररिपुम् ।
अतिक्रन्दद्द्वन्धुव्यसनजलधावार्तिसमये
क्रियानागन्ता ते शिवशिवहतोऽस्म्येव भवता ॥ मानसोल्लास

இதாநீமத்யல்பேஷ்வயி ஹ்ருதய கார்யேஷ்வதிமஹா
ந்யாநுவ்யாஸங்கஸ்தேநகலயஸி யேந ஸ்மரரிபும் ।
அதிக்ரந்தத்வந்த்வவ்யஸநஜலதாவார்திஸமயே
க்ரியாநாகந்தா தே ஶிவஶிவஹதோऽஸ்ம்யேவ ஹவதா ।

अयि हृदय ஹே மனமே! இப்பொழுது நீ மிகவும் அற்பமான உண்பது உறங்குவது முதலான கார்யங்களில் அதிகமான முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. அஃதெங்ஙனமெனில் மூன்றுலகங்களையும ஜயித்தவனை மன்மதனை ஒரே நிமிஷத்தில் ஜயித்தவராயும் ஸகலாபீஷ்டங்களையும் கொடுக்கும் சக்தி பெற்றவராயுமிருக்கிற ஸ்ரீ சந்திரசேகாரரை ஒரு க்ஷணம்கூட நீ ஸ்மரிக்காமலிருப்பதைக்கொணடு நன்கு அறியப்படவில்லையா? தற்காலமபிமானியாயிருக்கும் பந்துக்கள் அவஸானகாலத்தில் எனக்கு ஸஹாயம் செய்வார்களா. அதினால் இப்பொழுது நான் இவ்விதமிருக்கிறேனென்றும் கூறமுடியாது. சரீரத்திற்கு முடிவுகாலத்தில் ரோகத்தால் மிகவும் துக்கப்பட்டுக்கொண்டிருககுமபொழுது வாய்விட்டுக் கதறிக்கொண்டு துக்கமாகிற கடலில் முழுகிக்கொண்டிருக்கும் பந்துக்களில் உனக்குக் கூடவந்து ஸகாயம செய்யக்கூடியவர்கள் ஏது ஒருஸமயம் யாராவது செய்வோமென்று கருதினலும் எப்படி ஸாத்தியமாகும். இந்த அபிப்ராயத்தையே

मृतं शरीरमुत्सृज्य काष्ठलोष्टसमं भुवि ।
विमुखाबान्धवायान्ति धर्मस्तमनुगच्छति ॥

ம்ருதம் ஶரீரமுத்ஸ்ருஜ்ய காஷ்டலோஷ்டஸமம் புவி ।
விமுகாபாந்தவாயாந்தி தர்மஸ்தமநுகச்சதி ।

மரணத்தையடைந்த சரீரத்தை உபயோகமற்ற கற்கட்டைகளைப்போல் வெளியில் எறிந்துவிட்டு ஸகல பந்துஜனங்களும் திரும்பிக்கூடப்பாராமல் போய்விடுகிறார்கள் அக்காலத்தில் அவரவர்களால் செய்யப்பட்ட தர்மம் தான் ஸஹாயமாகப் பின் தொடருகின்றது என்று ஒரு மஹரிஷியும் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் ஹே ஹ்ருதய! உன்னால் நான் மிகவும் அடிக்கப்பட்டவனாக ஆகிறேன். கஷ்டம் என்கிறார். மனத்தை நற்காரியங்களில் செல்லும்படி செய்யவேண்டும்.

உப-பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
பிரபவ-௵ கார்த்திகை-௴ ௨௳

# பிராமணன் பத்திராதிபரின் வினாவிற்கு விடை.

சென்ற ஐப்பசி௴ 21௳ வெளிவந்த பிராமணன் பத்திரிகையில் முதற் பக்கத்தில் பத்திராதிபர் காலத்தில் புரட்டாசி௴ 21௳ வெளிவந்த ஆர்யதர்ம ஸஞ்சிகையில் எம்மால் எழுதப்பட்ட கீதையும் ராட்டினமும் என்கிற விஷயத்தில் தமக்குச்சந்தேகங்களிருப்பதாக வெளியிட்டிருக்கிறார், அவைகளை விசாரிக்கவேண்டி முன்வருகிறோம்.

ஆர்யதர்மத்தில் கீதை வர்ணாச்ரமதர்மத்தை உபதேசிக்க வேண்டி முன்வந்ததல்லவென்று எம்மால் வரையப்பட்டது. ஸரியல்லவென்றும் இன்னும் பல பல விருத்தமான அபிப்பிராயங்களும் அதிலிருந்து ஸாமான்ய ஜனங்களுக்கும் தோன்ற இடமிருப்பதாகவும் பிராமணன் பத்திராதிபர் வெளியிட்டிருக்கிறார்.

கீதாசாஸ்திரம் வர்ணாச்ரமதர்மங்களை உபதேசிக்க வேண்டி முன் வந்ததல்ல. மோக்ஷஸாதனமான வழிகளை அறிவிக்கவேண்டி வந்திருக்கின்றது என்று ஆர்யதர்மத்தில் எழுதப்பட்டிருப்பதுண்மையே. எதற்காக இவ்விதம் எழுதப்பட்டிருக்கின்றது இங்கு முன்பின் பிரகரணம் என்னவென்பதை சற்றும் உற்று நோக்காமல் இவ்விதம் வெளியிட்டிருப்பதைப்பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது.

முக்கியமாய் லோகக்ஷேமத்தின்பொருட்டு வெளியிடப்பட்டிருக்கும் சாஸ்திரங்கள் கர்மகாண்டமென்றும் ஞானகாண்டமென்றும் இருவகைப்படும். இவ்விரண்டுகளிலும் உட்பிரிவுகள் பலவிருக்கலாம். இவைகளில் கர்மகாண்டமென்பது அந்தந்தஜாதி ஆச்ரமம் இவைகளுக்குற்ற தர்மங்களையே பெரும்பாலும் முக்கியமாயறிவிக்கும் நோக்கமுடையது. இரண்டாவதான ஞானகாண்டமானது. லோகாந்திரத்தில் அடையவேண்டிய ஸுகத்திற்குச் சாதனமான விஷயங்களையே பெரும்பாலும் வெளியிடு

கின்றது. இவ்விதமிருந்தாலும் கர்மகாண்டத்தில் ஞானகாண்
டத்தின் விஷயத்தையும், ஞானகாண்டத்தில் கர்மகாண்ட விஷ
யத்தையும், சொல்லப்படவில்லை என்றாவது சொல்லியிருந்தால்
அது உசிதமில்லையென்றாவது ஒருவரும் கருதுவது நியாயமில்லை.
இந்த இரண்டு சாஸ்திரங்களும் ஒன்றுக்கொன்று பிடிப்புள்ளவை
களாக இருக்கின்றனவேயன்றி ஸம்பந்தமில்லாதவைகளென்று
கூற முடியாது. கர்மகாண்டமென்று கூறப்பட்ட சாஸ்திரங்
களும் மோக்ஷத்தைப் பெறவேண்டியே அதற்கு இருக்கவேண்
டிய முதற்படியான சித்தசுத்திக்கு வேண்டிய ஸாதனங்களை விதிக்
கின்றன. இவைகளிலும்மோக்ஷத்திற்குக்கிட்டின ஸாதனங்களாக
வேதாந்த சாஸ்திரங்களில் அதாவது ஞானகாண்டங்களில் கூறப்
படும் ஸாதனங்களும் சிற்சிலவிடங்களில் வெளியிடப்பட்டிருக்
கின்றன. மனு, யாக்ஞவல்கியர் முதலான மஹரிஷிகளால் கூறப்
பட்ட தர்மசாஸ்திரங்களில் ஜகத்தின் உற்பத்தி பிரம்மஸ்வரூப
நிரூபணம் முதலானவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்
விதமே ஞானகாண்டமென்கிற உபநிஷத்து பாஷ்யங்களிலும் தர்
மத்தைக் கூறுவதுமுண்டு. ஆனால் இதில் ஒரு விசேஷமுண்டு.
அஃதாவது கர்மகாண்டங்கள் தர்மாதர்மஸ்வரூபத்தையே முக்கி
யமாகக்கொண்டு முறையே அவைகளையே அறிவிப்பதோடு மத்தி
யில் அபேக்ஷையுள்ள சில ஞானகாண்ட விஷயங்களையும் கூறும்.
ஆனால் அவைகளின் நோக்கம் ஞானகாண்டத்தையே முக்கியமா
கக் கூறவேண்டுமென்பதல்ல. இவ்விதம் ஞானகாண்டத்திலும்
அபேக்ஷையுள்ள சிற்சில தர்மங்களையும் கூறலாம். அவைகள்முக்ய
மாய் தர்மத்தையே போதிக்கவேண்டுமென்றுவெளிவந்தவையல்ல,
ஞானம் கர்மா இவ்விரண்டிற்குள் கர்மாக்களையே முக்கியமாக போ
திக்க முன் வந்திருக்கும் சாஸ்திரங்களுக்குக் கர்மகாண்டமென்
றும் மோக்ஷத்திற்குக் கிட்டின ஸாதனங்களை போதிக்க முன்
வந்திருக்கும் சாஸ்திரங்களுக்கு ஞானகாண்டம் என்றும் உலகில்
வழங்கப்படுகின்றது. கீதையை எந்தமாதிரி வியவகரிக்கின்றார்க
ளென்று நாம் கவனித்தால் ஞானகாண்டமாகவே பலரும் கூறு
கிறார்கள். இந்த கீதாசாஸ்திரத்தையும் ஞானகாண்டத்திலொன்
றாகக் கருதி கீதாபிரஸ்தானம் உபநிஷத்ப்ரஸ்தானம் ஸூத்ரப்ரஸ்
தானம் என்று மூன்றையும் சேர்த்து பிரஸ்தானத்திரயமென்று
கூறுகிறார்கள். இந்த அபிப்பிராயத்தைக் கொண்டுதான் இந்த

கீதாசாஸ்திரத்திற்கு பாஷ்யமியற்றிய ஸ்ரீ பரமேசுவர அவதார பூதர்களான ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகளவர்கள் கீதாசாஸ்திரத்தின் ஆரம்பத்தில் இந்த சாஸ்திராரம்பம் எதற்காகவென்று பிரயோஜனத்தை விசாரித்து முடிவுசெய்யுமிடத்தில் தர்மஸூக்ஷ்மங்களை அறியாதவனும் மித்யையான ஞானத்தோடு கூடியவனும்பெரிதானசோகஸமுத்திரத்தில்மூழ்கியவனுமான அர்ஜுனனுக்குஆன்மஞானத்தைப் போதிப்பதைத்தவிரவேறுபாயமில்லையெனக் கருதி பகவானான வாஸுதேவர் அர்ஜுனனிடத்தில் கருணைகொண்டு அவனை உத்தாரணம் செய்யவேண்டுமென்று ஆத்மஞானத்தைப்போதிக்கவேண்டி உபக்ரமம் செய்கிறாரென்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளால் இந்த கீதாசாஸ்திரம் ஞானகாண்டமென்று நன்கு விளங்குகின்றது. ஞானகாண்டத்தில் மோக்ஷத்திற்குக் கிட்டியதான ஸாதனங்களை போதிக்க வேண்டுமென்கிற நியமமேயல்லாமல் வர்ணாச்ரமதர்மத்தைப்போதிக்க வேண்டுமென்கிற நியமமில்லை. இந்த தத்வார்த்தத்தையறியாமல் காந்தி இளவயதில் விதவையாகப் போவதற்கு தீண்டாமைக்கும் பகவத்கீதையில் இடமே கிடையாதென்று சொல்லியிருக்கிறார். அவ்விதம் அவர் கூறுவது ஸரியல்ல. கீதாசாஸ்திரம் வர்ணாச்ரமதர்மங்களை உபதேசிக்கவேண்டி முன் வந்ததல்ல மோக்ஷஸாதனமான முக்கியமான வழிகளை அறிவிக்கவேண்டி வந்திருக்கிறது என்று எம்மால் எழுதப்பட்டிருக்கிறது. இங்கு கீதையானது மோக்ஷத்திற்கு முக்கியமான ஸாதனத்தைக் கூற வந்தபடியால் அதற்கு அங்கமாக வேண்டிய சில வர்ணாச்ரமதர்மத்தை மாத்திரம் அது கூறுமேயல்லாமல் வர்ணாசிரம தர்மங்களையே முக்கியமாக வெளியிடவேண்டுமென்று முன்வந்த தர்மசாஸ்திரங்களைப் போல் தீண்டாமை, விதவாவிவாக நிஷேதம் முதலியவைகளை வெளியிடுவதற்காக கீதாசாஸ்திரம் ஏற்படவில்லை. இந்த விஷயங்களை இவைகளுக்காகவென்றேற்பட்ட சுருதிஸ்மிருதி புராணங்களைப் பார்த்தால் நன்கு ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறார்கள் என்கிற அபிப்பிராயத்துடன் வர்ணாச்ரம தர்மங்களை உபதேசிக்கவேண்டி முன்வந்ததல்ல என்று கூறப்பட்டிருக்கிறது. வர்ணாச்ரமதர்மங்களை என்கிற இடத்தில் ஸர்வம் வாக்கியம் ஸாவதாரணம் என்கிற நியாயத்தால் வர்ணாச்ரம தர்மங்களையே முக்கியமாக உபதேசிக்க வேண்டுமென்று முன்வரவில்லை என்று கருத்து

மேல் வாக்கியத்தால் இக்கருத்தும் நன்கு வெளியாகின்றது. இவ் விதமிருக்க இந்த இடத்தில் பிராமணன் பத்திராதிபர் தன் புத்தி க்கிருக்கும் பூராஸாமர்த்தியத்தையும் காண்பிவித்து என்னால் கூற ப்படாததும் மனதினூற்கூடக் கருதப்படாததுமான விபரீதமான பல ஆக்ஷேபங்களைத்தாறுமாறாக ஊெப்பிவிட்டு வர்ணாசிரமகர்மத் திலும், கீதாசாஸ்திரத்திலும் தனக்குத்தான் பூர்ணாபிமானமி ருக்கென்பதை இதை வியாஜமாகக் கொண்டு அறிவிக்கமுன்வந்த விஷயத்தில் நாம் சந்தோஷப்படுகிறோம். தனக்குத் தோன்றிய படியெல்லாம் ஆக்ஷேபங்களைக் கூறி பிறகு அந்தப் பாராவின் முடிவுரையில் ஆனால் இப்படிப்பட்ட அபிப்பிராயங்கள் அப்பத் திராதிபருடைய மனதிலிருப்பதாக தான் சொல்லவில்லையென்றும் அவருடைய வார்த்தைகளின் இணைப்பு இப்படிப்பட்ட கருத்து களைவெளியாக்கக் கூடிய நிலைமையிலிருக்கிறதென்றே நாம் கவலைப் படுகிறோமென்றும் எழுதியிருக்கிறார்.

இதற்காக இவர் ஏன் கவலைப்படவேண்டும். இவரை யார் கவலைப்படச் சொன்னார் உலகிலுள்ள ஸகல விஷயங்களிலும் இவரா கவலை எடுத்துக்கொண்டு சீர்திருத்த முன்வந்திருக்கிறார். ஒரு கார்யத்தை நடத்த வேண்டுமென்று கங்கணம்பூண்டு முன் வந்திருப்பவர்கள் அது ஸம்பந்தமாக வரும் எவ்வித தகவல்களுக் கும் ஸமாதானம் சொல்லத் தயாராயிருப்பார்கள் என்பதை சற் றும் கவனியாமல் தனக்குச்சம்மந்தமில்லாத கார்யத்தில்தானாகத் தலையிட்டுக் கொண்டு கவலைப்படுகிறோமென்று வீண் கூச்சல் எதற்காகப் போடுகிறாரோ தெரியவில்லை. எம்மால் வெளியிடப் படும் விஷயங்களில் எவ்வித சங்கை யாருக்கேற்பட்டாலும் எம க்கு எழுதிக்கேட்டால் விடையளிக்கத் தயாராயிருக்கிறோம். யா ராகிலும் ஸந்தேகங்கொண்டு என்னைக்கேட்டு அது உசிதமாயிரு ந்து அதற்கு சரியான பதில் எம்மால் சொல்லப்படாமலிருந்தால் ஒரு ஸமயம் என்னிடம் அபிமானம் கொண்டு நான் கவலைப்படுகி றேனென்று சொல்லலாம். அப்பவும் இவர் கவலை கொள்ளவே ண்டிய அவசியமேயில்லை. அப்படியிருக்க ஒருவரும் ஒருவித மான ஸந்தேகமும் கொள்ளாதிருக்கும்பொழுது இவராகக் குயு க்தி செய்துகொண்டு தாறுமாறான ஆக்ஷேபங்களைக் கூறி இவ்வி தம் பிறர் சங்கிப்பார் என்று தனது ஞானதிருஷ்டியால் கண்டு பிடித்து எதற்காக இவ்விதம் எழுத முன் வந்தாரோ தெரியவி

ல்லை ஒரு ஸமயம் யாராவது இவரை ஸந்தேகப்பட்டுக் கேட்டாலும் ஸரியானபதில் கூற இஷ்டமிருந்தால் கூற இல்லாவிடில் அவர்களுக்கே எழுதிக்கேளுங்கள். பதில் வரும் என்று சொல்வதன்றோ நியாயமாகும். இதன்றோ நடு நிலைமையிலிருக்கும் பண்டிதர்களுக்கழகாகும். கீதாசாஸ்திரத்திலும் வர்ணாச்ரம தர்மங்களிலும் இவருக்கிருக்கும் அபிமானத்தில் நூறில் ஒரு பாகமாவது எங்களுக்குமிருக்குமென்பதை ஏன் இவர் கவனித்திருக்கக் கூடாது.

மற்றொரு பாராவில் இப்பொழுது ஸநாதநதர்ம ஸம்ரக்ஷணத்தில் கர்மநெறியைச் சிறிதும் தவறாது என்றுபக்கிரமித்து எம்மைச் சிலாகித்து இப்பெரிய பண்டிதருடைய அபிப்பிராயங்களையோ பிரச்னைகளையோ கண்டிக்க நாம் முன்வந்திருப்பதாக எவ்ரும் தப்பபிப்பிராயப் பட்டு விடக்கூடாதென்று எழுதியிருக்கிறார். இவ்விதம் எழுதியிருப்பது இவருடைய உண்மையான அபிப்பிராயமாயிருப்பின் சென்ற பாராவில் பிறரை வியாஜமாகக் கொண்டுக் காறுமாறாகத்தோன்றியபடியெல்லாம்தூஷிக்கநியாயமுண்டா? இவர் புகழ்வதாலும் இகழ்வதாலும் பெருமையையோ சிறுமையையோ நான் எதிர்பார்த்தவனல்ல நம்மால்எழுதப்படும் விஷயங்களை அறியக்கூடிய சக்தி பிறருக்கும் கொஞ்சம் இருக்கும் என்பதை கவனியாமல் வீணாக நிந்தாஸ்துதி எதற்காகச் செய்ய வேண்டுமென்று வருந்துகிறேன்.

இதன் முடிவுரையில் மீண்டும் இவ்விஷயத்தை விபரமாக மறுமுறை ஆராய்வோமென்றும் பயமுறுத்தியிருக்கிறார். உலகில் பலவாறான விவாதங்கள் தோன்றியிருக்கும் இக்காலத்தில் நமக்குள்ளும் அதிகமான விவாதம் வேண்டாமென்று நினைத்தாலன்றி மறுமுறை ஆராய்ச்சி செய்யும் சக்தி இவருக்கு இருப்பதுபோல் ஆசார்யர்களுடைய அனுக்கிரகபலத்தால் எங்களுக்கும் கொஞ்சம் ஏற்படலாமென்று நாங்களும்தான் நினைக்கிறோம். பெரிய காரியங்களை நடத்த வேண்டுமென்று முன்வந்திருப்பவர்கள் அனாவச்யமான விஷயங்களில் புகுந்து துர்வாதம் செய்ய முன் வருவது அவர்களுடைய நோக்கத்திற்கு அழகல்லவென்பதையும்பிராமணன்பத்திராதிபர் அவர்களிடம்எனக்கிருக்கும்ஸ்நேக முறையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உபபத்திராதிபர்.

---

# ச்ராத்த விமர்சம்.

இப்பிரபஞ்சத்திலுள்ள ஸகலமனிதர்களும் வருஷத்துக்கு
ஒருமுறை தங்களுடைய முன்னோர்கள் இறந்த மாதங்களின்
திதியை அவர்களை உத்தேசித்து ரொம்ப பக்தியுடனும் விசுவா
ஸத்துடனும் நெடுங்கால வழக்கமென்று கொண்டாடி வருவதை
நாளது வரையில் காணலாம். இதை உலகம் அழியும்வரையில்
எவ்வித விரோதம் நேரிடினும் ஸகலரும் அனுஷ்டித்தே வருவார்
கள் என்பது நிச்சயம். நம்முடைய தேசத்தை ஆளும் ராஜாங்
கத்தார் கூட முன் ஆண்ட சக்ரவர்த்தியின் மரண தினத்தன்று
ஸகல ஆபீசுகளுக்கும் பொது விடுமுறையாக லீவு ஏற்படுத்தியி
ருக்கிறார்கள். விஷயம் எவ்விதமிருப்பினும் என்னவிதமான நிர்ப்
பந்தமிருந்தாலும் கட்டாயம் வருஷத்துக்கொருமுறை முன்னோர்
களின் மரணதினத்தை கோபமில்லாமலும் அவஸரப்படாமலும்
ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டியது அவசியமென்றே மே
லே சொல்லும் காரணங்களால் பிரகாசமாய் விளங்கும். இந்துமத
ஸ்தர்களுக்கு விசேஷ பக்தியும் வேதோக்தகர்மாவென்று மிகுந்த
சிரத்தையுமிருந்து வருவதால் இதற்கு ச்ராத்தம் என்றும் மரண
மடைந்த திதியில் செய்யப்படுவதால் திதி என்றும் பெயர் வழ
ங்குகிறது. மரணமடைந்தவனின் ஆத்மா எந்த உலகத்திலிருப்
பினும் எவ்வித ஜன்மம் எடுத்திருப்பினும் திருப்தி அடையும்பொ
ருட்டு ஜனங்களால் பிரம்மத்தின் முதல் சிருஷ்டியான பிராம்மண
ரிடத்தில் அன்றயதினம்தான் புஜிக்கும்படியானதும் வைதீகத
துக்கு யோக்கியமானதுமான வஸ்துக்களைக் கொடுத்து ஸந்தோ
ஷப்படுவதைக் கிராமாந்திரங்களில் காணலாம். பழைய ராஜாங்
கத்தாரால் பிரதி கிராமங்களிலும் பிரஜைகளின் வேண்டுகோளின்
பேரில் பஞ்சாங்கமான்னியம் என்றும் வேதவிர்த்திமான்னியம்
என்றும் கொடுக்கப்பட்டு அதைத் தீர்வையில்லாமல் புரோஹி
தர்கள் அனுபவித்துக்கொண்டு ஜனங்களின் வைதீககர்மங்களை
நாளது வரையில் நடத்தி வருகிறார்கள். ஷை புரோஹிதர்கள்
காலத்தை அனுஸரித்து ஜனங்களும் வைதீககர்மாவைச் செய்து
வைக்காமலோ மான்னியத்தை பராதீனமோ செய்யும்பக்ஷத்தில்
ஷை மான்னியத் தீர்வை விதித்து வசூலாகும் தொகையை ஜனங்க
ளால் கோரப்படும் புரோஹிதர்களுக்கு கொடுத்து விடுகிறார்கள்.

இதிலுள்ள விசேஷ குணங்களை இதினாலேயே கண்டு கொள்ளலாம். பிராமண விரோதிகளான சில பிரபுக்கள் தாங்கள் செய்யும் சிராத்தம் முதலிய வைதிககர்மாவில் பிராமணர்களுக்கு ஒன்றும் கொடுக்கக்கூடாதென்றும் அவர்களைக்கூப்பிடக் கூடாதென்றும் பிரசங்கம் செய்கின்றனரேயொழிய அந்த வைதீக காரியங்களைச் செய்யவே கூடாதென்று சொல்லுவதாகத் தெரியவில்லை.

மேலும் அவர்களுக்குப் பிராமணர்களை ஹிம்ஸிப்பதும் தூஷிப்பதும் தவிர வைதிககாரியத்தில் அளவற்ற சிரத்தையும் பக்தியும் இருப்பதாக அவர்களால் பிரசுரிக்கப்படும் பத்திரிகையினாலேயே ஏற்படுகிறது. இப்படிப்பட்ட அபூர்வ பிரபுக்களுக்கு நாம் மனப்பூர்வமாய் நன்றிபாராட்டவேண்டியது அவசியம். இது விஷயம் நிற்க சிராத்த விஷயத்தில் வைதிக லௌகிக பிராமணப் பிரபுக்களின்கொள்கையும் அனுஷ்டானமும் எவ்விதமிருக்கிறது.

இந்தக் கலியுகத்தில் பிராமணர்களுக்கு இந்த சிராத்த விஷயம் ஒன்றுமட்டில் விடமுடியாமல் அனுஷ்டிக்கக்கூடிய நிர்ப்பந்தமான ஸ்திதியில் இருந்து வருகிறது. பிராமமணன், ஒரு வருஷம் பூராவிலும் செய்யவேண்டிய நித்ய நைமித்திக சிராத்தங்கள் 96 யும் பரம வைதீகர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள்.

श्रद्धयादीयते श्राद्धं । சிராத்தம் என்பது பார்வணம், ஹிரண்யம், திலதர்ப்பணம், ஆமம் என நான்கு வகைப்படும். பார்வணசிராத்தமே முக்கியமானது என்று மஹரிஷிகளின் அனுஷ்டானமும் அனுமதியும் ஆகையால் நைமித்திக சிராத்தங்களைக் கட்டாயம் பார்வணமாகவே செய்ய வேண்டியது. சில வைதிகர் நித்யசிராத்தங்களில் சிலவற்றைப் பிராம்மண முகமாகவும் ஹிரண்ய ரூபமாகவும் செய்து வருகிறார்கள், அநேகமாக திலதர்ப்பணரூபமாகவே நடந்து வருகிறது. ஆமம் என்பது அக்கினி ஹோமத்துக்கு யோக்கியமில்லாத நான்காவது ஜாதிக்கே உரியது. சிலர் அயனம் தர்சம் விஷுவம் தவிர மற்ற சிராத்தங்கள் காருண்யமென்று செய்வதில்லை. அஷ்டகா சிராத்தம் ஸங்கிரமணசிராத்தம் அவசியம் செய்யவேணுமென்று புராணோக்தங்களால் ஏற்படுகிறது. மஹாளயம்

वृश्चिकादर्शनं यान्ति निराशाः पितरोगताः ॥

வ்ருஶ்சிகாதர்ஶநம் யாந்தி நிராஶா: பிதரோகதா: ।

ஆஷாடதர்சம் முதல் கார்த்திக தர்சம் வரையில் தன்னுடைய ஸந்ததிகள் மஹாளய சிராத்தத்தைச் செய்வார்கள் என்று காத்திருந்து சபித்துவிட்டு நிராசையாய் போய்விடுகிறார்களென்று இதன் பொருள். ஆகையால் மஹாளயசிராத்தம் ரொம்ப அவசியமானதே. இந்த பிதுர்க்கள் இவர்களுக்கு அவசியம் இல்லைபோலும், ஒவ்வொன்றும் கட்டாயம் அநுஷ்டிக்கக் கூடியதே. ஒரு ஸமயம் நித்யசிராத்தத்தை தர்ப்பண ரூபமாகச் செய்தாலும தாய் தகப்பன் சிராத்தங்களையாவது பார்வண ஹோமத்துடன் அவசியம் செய்யவேண்டியது. இப்படிப்பட்ட சிராத்தத்துக்குக காலம்.

दिवसस्याष्टमे भागे यदामन्दाय ते रविः ।
सकालःकुतपोनाम पितृभ्यो दत्तमक्षयम् ॥

திவஸஸ்யாஷ்டமே பாகே யதாமந்தாயதே ரவி: ।
ஸகால:குதபோநாம பித்ருப்யோ தத்தமக்ஷயம் ॥

பகலின் எட்டாவது பாகமாகிய 15-16 நாழிகையில் சூரியன் தேஜஸ்ஸு குறையும காலத்துக்குககுதபம் என்று பெயர். அந்த ஸமயத்தில பிதுர்க்களை உத்தேசித்துச் செய்யப்படும் சிராத்தத்துக்கு அளவில்லாத பலன் என்று அர்த்தம்.

பிராமணர்கள் பூராவும ஒரு காலத்தில் தேவநாகர பாஷையை ஸகல ஸமயத்திலும் ஸொந்த பாஷையாகவே உபயோகித்து வந்தார்கள என்பதற்கு அறிகுறியாகிய அந்த பாஷை பேசுபவராயினும சிராத்த தினத்தன்று எல்லாதேசங்களிலும ஸமஸ்த பிராமணர்களும ஸமஸ்கிருதத்தாலேற்படும் வாசகத்தையே உபயோகிக்கிறார்கள். சிராத்த விஷயத்தில மதஸித்தாந்த பாஷ்யகாரர்களின் அபிப்பிராயம பலதரப்பட்டதாயினும் சரீரத்தைவிட்டுப் பிரிந்த ஆத்மாவுக்கு ஜீவஜெந்துக்களிலோ தேவதைகளிடமோ பூமியிலோ தங்கியிருப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லாததால் சிராத்தகாலத்தில ரொமப நியமத்தோடு வரிக்கப்பட்ட பிராமண போஜனத்தினாலும அக்னியில் ஹோமம் பண்ணப்பட்ட அன்ன ஹோமத்தாலும், பூமியில் வைக்கப்படும் பிண்டதானத்தாலும் முறைப்பே திருப்திபண்ணி வைக்கப்படுறது. अक्रोतमत्वरा श्राद्ध சுகோ ராயகேஷுரா ஸு ஹம் ஆரம்பித்து முடியும்வரையில் சிறிதளவு கோபமும் அவஸரமும கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

मृताहं समतिक्रम्य चण्डालः कोटिजन्मसु ।
𑌮𑍃𑌤𑌾𑌹𑌂𑌸𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌃 𑌕𑍋𑌟𑌿𑌜𑌨𑍍𑌮𑌸𑍁 ॥

ஆசௌசம் உபராகம் தவிர மற்ற காலங்களில் திதி தவராமல் சிராத்தத்தைச்செய்ய வேணுமென்றும் தவறினால் கோடி ஜன்மம் சண்டாள ஜாதியில் பிறக்கிறான் என்று பயங்கரமான விதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிராத்தங்களில் கர்த்தாவுக்கும், புஜிக்கும் பிராமணர்களுக்கும் உபயோகப்படும் வஸ்துக்களுக்கும் விசேஷ நியமத்தை முன்னோர்களான ரிஷிகளும் ஸ்மிருதிகர்த்தாக்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

उपराग सहस्राणि व्यतीपातायुतानिच ।
अमालक्षन्तु द्वादश्याः कलां नार्हन्ति षोडशीम् ॥
एवं विधायाः द्वादश्याः तिस्रः कोट्यर्धकोटयः ।
माता पित्रोर्मृताहस्य कलां नार्हन्ति षोडशीम् ॥

𑌉𑌪𑌰𑌾𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌵𑍍𑌯𑌤𑍀𑌪𑌾𑌤𑌾𑌯𑍁𑌤𑌾𑌨𑌿𑌚 ।
𑌅𑌮𑌾𑌲𑌕𑍍𑌷𑌂𑌤𑍁 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌃 𑌕𑌲𑌾𑌂 𑌨𑌾𑌰𑍍𑌹𑌨𑍍𑌤𑌿𑌷𑍋𑌡𑌶𑍀𑌮𑍍 ॥
𑌏𑌵𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯𑌾𑌃 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌃 𑌤𑌿𑌸𑍍𑌰𑌃 𑌕𑍋𑌟𑍍𑌯𑌰𑍍𑌧𑌕𑍋𑌟𑌯𑌃 ।
𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌰𑍍𑌮𑍃𑌤𑌾𑌹𑌸𑍍𑌯 𑌕𑌲𑌾𑌂𑌨𑌾𑌰𑍍𑌹𑌨𑍍𑌤𑌿 𑌷𑍋𑌡𑌶𑍀𑌮𑍍 ॥

ஆயிரம் கிரஹண புண்ணிய காலம். பதினாயிரம் வியதீபாத புண்ணியகாலம். லக்ஷம் அமாவாஸையின் புண்ணியகாலம் சேர்ந்தால் துவாதெசிபாரணையின் $\frac{1}{16}$ கலைக்கு ஸமமாகாதென்றும் அப்படிப்பட்ட துவாதெசி பாரணையின் $3\frac{1}{2}$ கோடி புண்ணியமானது தாய் தகப்பன்சிராத்த காலங்களின் $\frac{1}{16}$ மடங்குக்கு ஈடாகாதென்று சொல்லியிருக்கிறது. விஷயம் இபபடியிருக்க சில லௌகிகப்பிரபுக்கள் தங்கள் ஆபீஸ், மேல்அதிகாரிகள் லீவு கொடுப்பதில்லையென்று வீணான ஸமாதானம் சொல்லிககொண்டு சிராத்த காலம் வருவதற்குமுன் 10-மணிக்கே செய்துவிட்டுத்தங்கள் ஜோலிக்கு பங்கம் வராமல் போய்விடுகிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பூராவுக்குமே வருஷத்துக்கு சிலகாலம்இப்படிப்பட்ட முக்கிய கர்மாவை ஸாவகாசமாய் செய்யும்பொருட்டு சம்பளத்துடன் ரஜாக் கொடுத்திருப்பதை வேறு விஷயங்களுக்கு உபயோகப்படுத்தி விடுகிறார்கள். இவர்களுக்கு சிராத்தகாலம் வருவது தெரியாதா. ஒரு மாதம் முன்னாடியே தெரிவித்து உத்தரவு வாங்கி ஸாவகாசமாய் செய்யக் கூடாதா. அன்றயதினம் பூராவு

மே நீச ஸல்லாபம் கடுமையான தபஸ் பலவிதமான யாகாதிகள் செய்துவந்த ரிஷிகளின் வம்சத்திலுதித்ததாய் சொல்லிக்கொள்ளும் பிராமணர்கள் எந்தக்காரியத்தையும் செய்யமுடியாத சரீர திருடமும் திரவியபலமும் மனுஷ்ய ஸஹாயமும் இல்லாத இக்காலத்தில் தாய் தகப்பன் சிராத்தத்தையாவது வருஷத்துக்கொரு முறை நியமத்துடன் செய்துவந்தால் அந்தப் பிதுர்க்கள் இவர்களுக்கு அரோகதிருடகாத்திரத்தையும் ஸந்தான ஸம்பத்துக்களையும் ஸர்வேசுவரன் கொடுத்தருளும்படியான அனுக்கிரஹத்தைச் செய்யமாட்டார்களா. அநேகம் பேர்களுக்கு சிராத்த காலங்களில் சொல்லப்படும் மந்திரத்தின் அர்த்தம் இன்னதென்பதே தெரியாது. அந்த மந்திரத்தைத் தங்கள் வாயினால் உச்சரிப்பதும் கிடையாது. மந்திரத்தைச் சொல்வது உபாத்தியாயர்களின் வேலையென்று மௌனமாகவே இருந்து விடுகிறார்கள். மந்திரத்தைக் கர்த்தாவாயினால் சொல்ல வேணுமென்று வாத்தியார்கள் சொல்லும் பக்ஷத்தில் லௌகிகம் தெரியாதவர் என்று இகழ்வதோடு சுருசுருப்புள்ள வேறு பிரகஸ்பதியை நியமித்துக்கொள்ளுகிறார்கள். காலத்தையும் தாரித்திரயத்தையும் யோசித்துத் தாங்களே மந்திரத்தைச் சொல்லிக் கர்த்தாவினால் குறிப்பிடப்பட்ட காலத்துக்கு முன்னதாகவே முடித்து விடுகிறார்கள். இது விஷயங்களை $\frac{70}{100}$ பிரபுக்களிடம் பிரத்தியக்ஷமாகக் காணலாம். இதை எழுதினதால் நான் தூஷித்து வருவதாய் எண்ணி வருத்தப்படாமல் காலத்தை அனுஸரித்துப் பரம கிருபையுடன் நினைத்து பெரியோர்களையும் ஆசாரியனையும் கேட்டுத் தெளிந்து சிரத்தையுடன் இந்த சிராத்த கர்மாவை மட்டிலாவது ஸகலரும் செய்து வருவார்கள் என்று நினைக்கிறேன். சிலர் சிராத்தங்களை அக்கினிஹோமம் பிண்டப்பிரதானம் நியமத்துடன் வரிக்கப்பட்ட பிராம்மண போஜனம் வேதோக்த மந்திரங்கள் முதலியவைகள் அவசியமில்லையென்றும் ஆலயங்களில் தளிகை நைவேத்தியம் செய்துகொடுத்தாய்விட்டதென்றும் சொல்லிவிடுவதாய் அநேகம் ஆஸ்திகர்கள் சொல்வதைக்கேட்டிருக்கிறேன். இதுவாஸ்தவமாயின் பிதுர்க்களை ஏமாற்றுவதற்கே ஒப்பாகும்.

जीवतोर्वाक्यकरणात् प्रत्यब्दं भूरिभोजनात् ।
गयायां पिण्डदानेन त्रिभिः पुत्रत्वमिष्यते ॥

ஜீவதோ வாக்யகரணாத் க்ஷயாஹே பூரிபோஜநாத் ।
கயாயாம் பிண்டதாநேந த்ரிபி: புத்ரஸ்ய புத்ரதா ॥

தாய் தகப்பன் ஜீவித்திருக்கும் காலத்தில் அவர்கள் சொல் தவறுமை. அவர்கள் பரலோகத்தை அடைந்த பிறகுப் பிரதி வருஷமும் அந்தத்திதியில் நியமத்துடன் அவர்களை உத்தேசித்துச் செய்யப்படும் சிராத்தங்கள் கயாக்ஷேத்திரத்துக்குப் போய் பிதுர்க்களுக்காகச்செய்யும் பிண்டதானம் இம்மூன்றும் செய்த பிறகே புத்திரனாகி ஆகிறான் என்பது இதன் தாத்பர்யம். ஞாபகம் வருவதற்குள் மாதுர் பிதுர்களின் வியோகம் நேர்ந்தால் அவர்கள் சொற் கேழ்ப்பது எங்ஙனம். கயைக்குப் போய் பிண்டதானம் செய்வது திரவிய மநுஷ்யஸாத்தியமுள்ளது. ஆகையால் ரொம்ப சிரத்தையுடன் நியமத்தோடு கயாக்ஷேத்திரத்தை மனதில் தியானித்துக் கொண்டு சிராத்தங்களைச் செய்யும் பக்ஷத்தில் இம்மூன்றையும் செய்தவனாகவே கருதப்படுகிறான். அதிகமாய் வளர்வதை யோசித்து இந்த வியாஸத்தை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். ஒருவருக்கும் தெரியாத விஷயத்தை சிக்ஷிக்க நான் முயன்றதாக மஹான்கள் ஆயாஸப்படாமல் ஸ்மரிப்பித்ததாக நினைத்து ஸகல ஆஸ்திக பிராமண பிரபுக்களும் சிரத்தையுடன் ஸாவகாசமாய் இந்த சிராத்த கர்மாவைச் செய்துவரும்படியான காலம் வருமாறு ஸர்வேசுவரனை மனப்பூர்வமாய்பிரார்த்திக்கிறேன்

தி. ந. தாதேசிகாசாரியா கம்மாபும்.

---

# அரிஹர அபேதம்&விக்கிரகாராதனம்.

எங்கெந்த ஸமயத்தில் உலகில் தர்மத்திற்குக்குறைவும் அதர்மத்துக்கு வளர்ச்சியும் எற்படுகின்றதோ அந்த ஸமயத்தில் நான் அவதரிப்பேன் என்றும் தர்மத்தை ஸ்தாபனம் செய்ய வேண்டி ஒவ்வொரு யுகத்திலும் நான் அவதாரம் செய்கிறேன் என்று கீதையில் உம்மால் சொல்லப்பட்ட வசனத்தை நீர் இப்போது மரந்துவிட்டீரா. ஆதிகாலம் தொடங்கி உலகில்நடைபெற்றுவரும் தர்மம்என்கிற இந்துமதமாகிய கற்பகவிருக்ஷத்தைத் தற்காலத்திலுள்ள சிலர் வேருடன் வெட்டிவிட வேண்டுமென்று மிகவும் முயற்சி செய்துவருவதால் அதிசீக்கிரமாக நீர் அவதாரம் செய்து இந்து மதத்தினர்கள் செய்யவேண்டிய தர்மாநுஷ்டானங்களை

நன்கு ஸ்தாபநம் செய்து நீர் செய்திருக்கிற பிரதிக்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்று பகவானிடம் ஒரு பக்தன் கேட்டுக்கொண்டபடி உலகத்திலுள்ள ஸகல ஜீவராசிகளிலும் மனுஷியஜன்மம் மிகவும் உத்க்ருஷ்டமானது, ஏனெனில் இந்த மானிடப் பிறவிக்கு தர்மம் அதர்மம் ஞானம் விசாரம் விவேகம் ஆத்மஞானம் ஈசுவரன் உண்டு இல்லை என்பதான (பகுத்தறிவு) விஷயங்களைத் தெரிந்துகொள்ள சக்தி வாய்ந்திருக்கிறது. மற்றுமுள்ள ஜீவப்பிராணிகளுக்கு அவ்விதமான பகுத்தறிவு கிடையாது. ஆகையால் "அரிது அரிது மானிடப் பிறவி அரிது" என்றார் தாயுமானவர். ஓ மனமே! இதற்கு முன் எத்தனையோ பிறவிகளை அடைந்து கடைத்தேருமல் இப்போது மனிடப்பிறவியாய் பிறந்திருக்கிறாய் இப்போதாவது முன்போல் இராமல் உன் சொந்த வீட்டை (மோக்ஷத்தை) அடைய ஈசுவரனை வேண்டிக்கொள். "இப்பிறவி விட்டால எப்பிறவி உனக்கு கிடைக்குமோ" மானிடஜன்மாவானது உலகில் மிகவும் குறைவு, பசு, பக்ஷி, கொசு, முதலியனவைகள் அதிகமாவதற்குக் காரணம், நாம் செய்யும் பாபச்செயலே அல்லாமல் வேறில்லை. ஆகையால் இவ்வுலகத்திற்கு மூலகாரணமாயும் சாசுவதமாயும் ரூபாரூபம் அற்றதாயும்காண்பதற்கு அரிய வஸ்துவாயும் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாயும் ஆனந்தமாயுமிருக்கிற ஓம் காரஸ்வரூபமான வஸ்துவை நாம் அருள் என்றும் திருமஞ்சனத்தால் அவரைக் குளிப்பாட்டி சாந்தமென்னும் குணத்தைச் சந்தனமாகப் பூசி ஞானம் தவம் கல்விவேள்வி தருமம் மனஉளக்கம் என்ற புஷ்பத்தால் அர்ச்சனை செய்து அகங்காரம் என்பதால் தூபம்காட்டி, அபிமானத்தால் தீபம் காட்டி, அன்னமயம், பிராணமயம் மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம், என்ற 5 அன்னத்தை பக்தியால் நிவேதநம் செய்து சிற்சக்தி, பராசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி, ஆகிய ஐந்து தீபாராதனங்களைக் காட்டல். தீபாராதனைசெய்து மேலான பரிபூரண ஞானப்பிரகாசத்தை நாம் அன்போடு மனதாரத் துதித்தும் வாயாரத் திருநாமங்களைச் சொல்லியும், காதால் அவருடைய திவ்ய சரித்திரங்களைக் கேட்டும் மானிடப்பிறவியாகப் பிறந்ததின் பலனாக பரமஸாயுஜ்ஜியத்தை அடைய வேண்டுமென்று நாம் விக்கிரகாராதனை செய்யவேண்டும். நாம் மானிட ஜன்மாவாய் பிறந்து ஸம்ஸாரமாகிற சமுத்திரத்தில் கலந்து மனமென்னும் சுழல் காற்றினல் அடிபட்டு ஆசை என்னும் அலைகளால் மோதப்பட்டு

தத்தளிக்கும் கஷ்டத்திலே இருந்து மோக்ஷமென்னும் கரையை அடைய வழிதேடவேண்டுமேயானால் நமது பஞ்சஇந்திரியங்களை அடக்கி மனதை ஒடுக்கி மூழுமனதுடன் ஈசுவரனைத் தியானித்தால் அதினின்றும் அன்பு உண்டாகும் அதுதான் பக்தி என்று சொல்லப்படும். 84-நூறு ஆயிரம் யோனிபேதங்களுக்குள் மானிடப் பிறவியாய்ப் பிறப்பது அரிது. அம்மானிடனுள் நாலு வகை வர்ணத்தில் பிறப்பது அரிது நால்வகை வர்ணத்தில் அந்தணராய் பிறப்பது அரிது. அந்தணருள் அறிவுடைய்யவர் அரிது. அறிவுடையோரினும் சித்தசுத்தி பெருவது அறிது. சித்தசுத்தி உடையோரில் ஞானசுத்தி அடைவது அறிது. ஞானசுத்தி அடையவேண்டுமானால் நிரந்தர பக்தியால்தான் வரவேண்டுமே யல்லாது வேறு ஒரு வழியும் கிடையாது. அப்பேர்ப்பட்ட பக்தியால் தான் நாம் முக்தியை சாசுவதமாக அடையலாம். இந்த பக்தி என்ற வலைக்குத் தான் ஈசுவரன் கட்டுப்படுவர். நம் மனமானது சதாகாலமும் ஈசுவரனையே நினைத்துக்கொண்டு வந்தால் மனமானது நாளடைவில் ஈசுவரத் தன்மையாகமாறி அவருடைய அநுக்கிரஹம் கிடைக்கும்.

உதாரணம்:— குழவிப்பூச்சியின் உருவத்தை ஒரு புழுவானது எவ்விதம் அடைகிறதோ அதுபோல நமது மனது ஈசுவரனையே நினைத்துத் தியானம் செய்துகொண்டிருந்தால் கட்டாயமாக அவருடைய அருளை நாம் அடையலாம்

शिलामृद्दारुचित्रेषु देवता बुद्धिकल्पिता ॥ नाकोपनिषत् ।

ஶிலாம்ருத்தாருசித்ரேஷு தேவதா புத்திகல்பிதா ।

(நாகோபநிஷத்)

இவ்விதம் மாறுவதற்குக் காரணம் மனம் ஒன்றேதான். ஈசன் இல்லாத இடமில்லை, அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். அவரைப் பார்க்க அவருடைய அன்பை அடையவேண்டுமேயானால் நமது மனம் முதலில் ஒரு பொருளின் மூலமாக ஒருமுகப்பட்டு வழிப்பட்டாலன்றி அவருடைய மஹிமையை அறிய இயலாது.

உதாரணம்:— சூரியகிரணங்கள் அநேகம். அதைக் கண்ணாடியில் வைத்து ஒருமிக்க சேர்ப்போமேயானால் அந்தக் கிரணத்தின் தன்மை அக்கினிஸ்வரூபமாக மாறி விடுகிறது. அது போல் நமது மனமாகிய கிரணங்கள் எங்கும் பிரிந்து செல்வதால் அதை ஒருமைப் படுத்தி ஒரு விக்கிரஹத்தின்கண் சேர்ப்போமேயானல் அப்போது நமக்கு அநுக்கிரஹம் கிடைப்பது நிச்சயம்,

மண், கல் என்றபொருள் என்று அதை மனிதன் தன்மனோ சக்தியால் அனேக ரூபங்களாகச் செய்து அந்த ரூபத்துக்கு ஏற்பட்டபடி பிராணப்பிரதிஷ்டை முதலானதுகள் செய்து அவைகளின் பெயர்களால் வழங்கி வருகின்றன.

ஜலம் என்ற பொருளுக்குப் பெயர் ஒன்று. அதை ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு பெயரால் கூப்பிட்டு வருகிறார்கள். ஜலம் தான் ரூபத்தை மாற்றினால் பெயரும் மாறிவிடும். (காபி-டீ-வெந்நீர்) அதுபோல ஈசுவரனுடைய (பிர்ம்மா, விஷ்ணு, சிவன்) பெயரும்மாறிவிடுகிறது. காரணப்பொருள் ஒன்று காரியப்பொருள் பல உண்டுஎன்பதான தாத்பர்யம். ஆகையால் நாம் கல்சிலை, மண், மரம், லோகங்கள், நவரத்தினங்கள் இவைகளால செய்யப்பட்டபிமபமோ படமோ, எதானாலும் சரி நாம் ஆராதிகக வேண்டியது அத்தியாவசியம. எங்கும நிறைந்தவனாயின ஒரு ஆலயத்துக்குள் வைப்பானேன என்றால் பள்ளிககூடத்தில் படிக்கும் மாணவாகளுக்கு பூகோள படததிலுள்ள ஒருசிறு புள்ளியைச் சுட்டிக்காட்டி இதுதான் (Madras Calcutte Bombay) என்று சொல்லிக கொடுத்தால் அந்த ஊரைப்பற்றி என்ன தெரியும. ஒன்றும் தெரியாது. அவைகளைப பற்றித தெரிய வேண்டுமேயானால் போய்ப் பார்த்தால தெரியும. இல்லாவிட்டால் தெரியாது. அதுபோல பரமசிவன் பார்வதி, லெக்ஷ்மி, கணபதி, சுப்பிரமணியன் எனறு பெயரைச் சொன்னால் அவாகளைப்பற்றின விஷயங்கள் மனிதனுககு என்ன தெரியும. ஒன்றுமே தெரியாது. தெரியவேண்டுமேயானால் கோவிலுக்குப்போய் ஈசுவரனுடைய ரூபததைப் பார்த்துப்பிறகு அவருடைய விசேஷங்களை அறியலாம. ஆனால் எவவளவுகாலம கோவிலுககுப் போகவேண்டுமென்றால அன்பு நிலைமை அபேதபுத்தி பேரன்பு மெய்மறந்த பிரேமை ஏற்படும் வரை நாம "ஆலயம் தொழுவது சாலவும நன்று" என்றார்.

உதாரணமாக ஸ்ரீ கிருஷ்ணன் ஒருநாள் தன் பக்தனாகிய விதுரர்வீட்டுககுச் சென்றார. அவர் வரவை விதுரரும அவர் மனைவியும் கண்டு ஆநந்தபரவசமாய், விதுரர் மனைவி விரைந்து வீட்டிற்குள்சென்று வாழைககனியைக கொண்டுவந்து உரித்துப் பழததைக கீழேபோட்டுத தோலியைக கண்ணபிரான கையில கொடுத்தாள். மெய்மறந்து அனபாய் தருகிற தோலியைத் தின்று கோபாலன் மிகக்க களிபபடைந்து என்ன மதுரம் எனறார். உடன் தானசெயத குற்றத்தைககண்டு வருத்தப்பட்டுக் கொண்டு மன்னிக்கும்படி வேணட அம்மா ! தோலியில் உனது பரிபூரண அன்பான மதுரம் நிறைந்திருந்தது என்றார், பேத

புத்தி இருக்கும்வரை ஆலயம் கட்டாயமாக நாம் போகவேண்டும். ஆலயத்திற்குப்போய், நாமஜெபம் செய்யவேண்டும். சப்தத்தினிடம் சித்தம் செல்லும் நாமஜெபத்துக்குவிசேஷ சக்தியுண்டு. நாம ஒலியானது பிரவி போணியத்த வேருடன் கோடரியினால் வெட்டிச்சாய்கின்ற ஓசையாலும் மோக்ஷலக்ஷ்மி அந்தஇடம் வாசம் செய்கிறாள். இமமட்டோவெனில எமனும் நாமஜபத்தைக் கேட்டமாத்திரத்தால் தலையை வணங்குகிறான். ஆகையால சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் வித்யாஸமில்லை, எந்த தெய்வத்தை வேணுமானாலும் நாம ஆராதிக்கலாம், கலியுகத்தால் நன்மை தீமைபோலும், தீமை நனமைபோலும் தோன்றும். உண்மையான பக்தியுள்ளவர்களுக்குக் கலியுகத்தில் நன்மை கிடைக்கும். காலரகசய உணர்ந்தோா அவசரபபடாமல் நிதானபுத்தியுடனும், பொருமையுடனும ஹரிநாமஜபம்செய்யவேண்டும், தேவாலயமானது ஆத்மாபிவிருத்திகல்விஅபிவிருத்திக்காக ஏறபட்டிருக்கிறது.

வயதிற் சிறியவனாக இருந்தாலும சரி, பெரியவனாக இருந்தாலும் சரி, படித்தவனாக இருநதாலும் சரி, மூட்டாளாகவோ, மூடனாகவோ வீண் காலக்ஷேபம செய்பவனாகவோ, மூர்க்கனாகவோ, பொலலாதவனாகவோ, எவவிதக்கெட்டநடத்தையுள்ளவனாக இருநதாலும சரி, என்னை எப்படியெல்லாம ஆராதிக்கிறார்களோ அதுபோல அவாகளுக்குபபோய் அநுக்கிரகம செய்வேன என்றார். ஈசனது வாசம் பக்தர்களுடைய ஹிருதயத்தில்தான் பக்தியின் மகிமையும், அதன் பெருமையும், சீர்மையும், சொல்ல முடியாது. பக்தியைக் கடைப்பிடித்தவரை மோக்ஷமென்றும, கரைஏறற வழி தோணி (ஓடம்) போலவும், உலகமாகிய வீட்டை விட்டு மோக்ஷமாகிய பேரினபவீட்டுக்கு ஏணிபோலவும், ஆநந்தமயமாகிய ஈசனைத் தரிசிபபதறகு ஏறபடுததிய வழிபோலவும உதவிபுரிகின்ற பக்தியின் பெருமையை அளவிடககூடுமோ, ஆகையால மானிடபபிறவியாய் பிறந்த நாம் இப்பிறவியில தவறாது பக்திசெய்து இநதஜெனமம ஸாபலயமாகும்படியான வழியைத் தேடவேணடும, “ இச்சமயம தவரிடில எச்சமயம கிடைக்குமோ.” இதனால்தான தாயுமானவர் “இபபிறவி தப்பினால் எபபிறவி கிடைககுமோ” என்றார். பக்தி ஒன்றே முக்தியை அளிக்கும். நாம எடுத்த மானிடஜன்மம வீண் ஆகாமல நமது வாழ்நாளை வீண் நாளாக்காமல தினந்தோறும உள்ளன்போடு கடவுளிடம பக்திசெய்து காலாந்தரத்தில் மோக்ஷத்தை அடையவேண்டும. சர்வபரிபூரண அகண்ட தத்துவமான பரம்பொருளாகிய ஈசன நமக்கு பக்தியைக் கொடுத்து முக்தியை அளிக்குமாறு அவரை ஸதோத்திரம்செய்து ஆநந்தமயமாய் நாம் இருக்கும்படி நமக்கு அநுக்ரஹம் செய்யட்டும.

வீரமணி வாத்தியாா
கொடாக்கரை.